**செய்தி வெளியீடு எண்:739** **நாள்: 02.11.2017**

## <u>செய்தி வெளியீடு</u>

2017 நவம்பர் மாதம் 4 முதல் 8 வரை பங்களாதேஷ் தலைநகர் 'டாக்கா' நகரில் நடைபெறவிருக்கும் 63—வது காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் தமிழகக் கிளையின் பிரதிநிதியாக மாண்புமிகு பேரவைத்தலைவர் திரு. ப. தனபால் அவர்களும், இந்திய வட்டார பிரதிநிதிகளின் செயலாளராக சட்டமன்றப் பேரவைச் செயலாளர் திரு. க. பூபதி, அவர்களும் கலந்து கொள்கின்றனர்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் மற்றும் பேரவைச் செயலாளர் ஆகியோர் மேற்குறிப்பிட்ட மாநாட்டில் கலந்து கொள்வதற்காக 03.11.2017 (வெள்ளிக்கிழமை) அன்று மாலை 07.30 மணிக்கு ஜெட் ஏர்வேஸ் விமானம் (9W-831) மூலம் புதுதில்லி சென்று 04.11.2017 அன்று டாக்கா நகருக்கு சென்றடையவுள்ளனர்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்ட மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு, ஆஸ்திரேலியா (சிட்னி & மெல்போர்ன்) மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் ஆய்வுப் பயணம் மேற்கொண்ட பின்னர் 18.11.2017 (சனிக்கிழமை) இரவு 10.00 மணியளவில் சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் விமானம் (SQ-528) மூலம் சென்னை வந்தடைகிறார்.

பேரவைச் செயலாளர் அவர்கள் மேற்குறிப்பிட்ட மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு 09.11.2017 (வியாழக்கிழமை) இரவு 8 மணியளவில் ஏர் இந்தியா விமானம் (AI-042) மூலம் சென்னை வந்தடைகிறார்.

**வெளியீடு : — இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை—9**